அங்கலாய்ப்போடு கூறுவர். வேறு சிலர் இப்பாம்புக்கு குழந்தையைப் பெற்றபின் முன்பைவிட பொருட்செல்வம் கூடியுள்ளது காணிகள், வயல் நிலங்கள் வீடு வாசல்கள் ஏராளமாக வந்து சேர்ந்தது மட்டுமல்ல இன்னும் பல வந்து சேருமென்பர். நீதிநாயகமுதலியாருக்கு இந்தப் பாம்பு பிறந்தநாள் அளவிடமுடியாத செல்வம் வந்துசேர்ந்தமையால் அதற்குக் காரணமாக விருந்த இந்தப் பாம்பினால் ஒரு காலம் தீமை வந்து அழிந்துபோகும் இது நிட்சயம் என்பார்.

இன்னும் யாரே ஒரு முனிவரோடு பகைத்துக்கொண்ட எவரையோ பாம்பாகப் பிறந்து சாபமிட்டதால் குலதெய்வத்தில் சிறந்த கமலம் அம்மையார் வயிற்றில் வந்து இப்பாம்பு பிறந்தது என்றனர். சிலர் இப்படியே வந்து பார்ப்பவர்கள் எல்லோரும் தங்கள் அறிவுக்கு ஏற்றவாறும் மனதில் தோன்றுவதையும் சொல்லி செல்கையில் மூத்தவர்களான மாப்பாண முதலியாரும் வவுனிய முதலியாரும் வளர்ந்து வாலிபர்களானார்கள். தம்பிரான் என்ற பாம்புடன் கூடிப்பிறந்த வள்ளிநாச்சன் மகளும் மங்கைப் பருவத்தையடைந்தாள்.

இப்படியே சில ஆண்டுகள் கழிய இடைவிடாது பாம்பு செய்கின்ற கண்கட்டி வித்தைபோன்று எந்தநாளும் செய்கின்ற திருவிளையாடல்களைப் பார்த்து மகிழ்ந்தும் தங்கள் நிலைமைக்குத் தகுந்தபடி பிள்ளைகளைத் திருமணம் செய்து வைத்து எவராலும் தப்பமுடியாத வயதில் மூப்படைந்து உடலும் மெலிந்திருந்தார் தந்தையாரான நீதிநாயகமுதலியார். இன்னும் சில ஆண்டுகள் சென்றால் வயது முதிர்ச்சியினாலே பற்கள் விழுந்து உரோமமும் நரைத்து அழகும் கெட்டு உடலும் கூனிவிடுமென்று நினைத்து இப்பொழுதே தனது கடமையைச் செய்ய எண்ணி தனக்குரிய காணி பூமிகள், நெல்வயல்கள் மற்றும் செம்பு பொன் வெள்ளி ஆகிய இலட்சுமி வாசம் செய்கின்ற செல்வ வளங்களையெல்லாம் மக்களுக்கப் பிரித்துக்கெடுப் பேனென்று மக்களை அழைத்துத் தான் தேடியபெரும்செல்வம் அனைத் தையும் பிணக்கு ஏதுமில்லாமல் சமபங்காகப் பகிர்ந்து மூன்று பிள்ளைகட்கும் பிரித்து வைத்துச் சொந்தமான நிலபுலங்களையும் பகிர்ந்து சாதனம் எழுதுகின்ற போது அந்தச் சமயத்தில் அங்கு வந்த பாம்பானது அங்கிருந்த பொருள்களையெல்லாம் உளக்கி படத்தினை விரித்துச் சீறிக்கோபித்து சாதனம் எழுதியஓலை எழுத்தாணி என்பவற்றை மிகுந்த வலிமையுடன் வாயினாற் பற்றித் துண்டாக வெட்டியெறிந்து பொருள்களை யுளக்கி அப்பொருள்களின் மீது நின்றாடியபோது தாய் தந்தையர் இதனைப் பார்த்து என்ன காரணமோ என்று யோசிக்கலாயினர். தனக்குரிய பங்கு தரவில்லையென்பது கோபந்தானென்று குறிப்பாலுணர்ந்து உள்ள பொருள் களில் உனக்குரிய பங்கைத்தருவோ மென்று சொன்னவுடன் கோபந்தணிந்து மனம் சந்தோசங்கொண்டு எனக்கும் பங்கு வந்ததென்று எண்ணி அங்கு அமைதியாய் இருந்தது. அப்பொழுது அரிய பொருள்களையும் நிலபுலங்களையும் தந்தையார் நான்காகப் பகிர்ந்து சாதனங்கள் எழுதிப் பிள்ளைகளே இப்பொருள்களில் ஒவ்வொருபங்கை எடுங்கள் என்று கூற பாம்பானது விரைந்து வந்து ஓர்பங்கைத் தள்ளிக்கொண்டு போய் கூடிப்பிறந்த

